## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மகாலிங்கம் | நாள் | 19.08.2024 |
| தகப்பனார் பெயர் | கண்ணுபையன் | | |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

25) இவ்வழக்கில் என் தந்தையால் இ.ம.எண்கள்.1/2019, 2/2019, 3/2020, 4/2020 ஆகியவை தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். மேற்படி இ.ம.எண்.1/2019 ற்கான சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3 (Ex.B.3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இ.ம.எண்.2/2019 ற்கான சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4 (Ex.B.4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இ.ம.எண்.3/2020 ற்கான சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5 (Ex.B.5)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இ.ம.எண்.4/2020 ற்கான சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6 (Ex.B.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

26) 1994 ம் வருடத்தில் என் தந்தை பெயரில் பாகபிரிவினை நடந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், அதற்கான ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால், அது வாய்மொழி பாகபிரிவினை ஆகும். என் தந்தையின் குடும்ப சொத்துக்கள் தொடர்பாக அவரது குடும்பத்தினரிடையே நடைபெற்ற பாகபிரிவினை அனைத்தும் வாய்மொழியாகத்தான் ஏற்படுத்தப்பட்டதா என்றால், இல்லை. இந்த வழக்கு சொத்திற்குட்பட்ட சர்வே எண் மட்டும் வாய்மொழியாக பாகபிரிவினை செய்யப்பட்டது. இதர சர்வே எண்களில் உள்ள சொத்துக்களை பொறுத்து, அவர்களுக்குள் பாகபிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது.

27) இவ்வழக்கில் என்னென்ன சர்வே எண்களை வழக்கு சொத்துக்களாக காண்பித்துள்ளேன் என்றால், ச.எண்.534/3C ல் 0.09 சென்ட் நிலம், 1972 ம் வருடத்தில் மேற்படி அதே சர்வே எண்ணில் என் பாட்டி தங்கம்மாள் கிரயம் பெற்ற 0.13 சென்ட் ஆக 0.22 சென்ட் நிலத்தை இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். சொத்து

விவரத்தில் அவ்வாறு எந்த வருடத்தில் மேற்படி சொத்து கிரயம் பெற்றது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு என் வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பாக வருடம் எதையும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், சரியல்ல.

28) என் வழக்குரை சொத்து விவரத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்களாக காண்பித்துள்ளேன் என்றால், இரண்டு அயிட்ட சொத்துக்களாக காண்பித்துள்ளேன். 1–வது அயிட்ட சொத்திற்கு சக்குபந்தி விவரங்கள் என்னவென்றால், புறம்போக்கு நிலத்திற்கு மேற்கு, செம்ப கவுண்டர் வகையறா நிலத்திற்கு வடக்கு, பொன்னம்மாள், மாதம்மாள் நிலத்திற்கும் தெற்கு, மாதம்மாள் நிலத்திற்கும் கிழக்கு ஆகும். 2–வது அயிட்டத்திற்கான சக்குபந்தி என்னவென்றால், மேற்படி 2–வது அயிட்டத்திற்கு சக்குபந்தி குறிப்பிடப்படவில்லை. ஆனால், 0.52 செண்ட் ல் 1/4 என குறிப்பிடப்பட்டுள்ளது. என் வழக்குரை சொத்து விவரத்திலும் 2–வது அயிட்ட சொத்திற்கு அவ்வாறுதான் 0.52 செண்ட் ல் 1/4 என குறிப்பிட்டுள்ளேனா என்றால், ஆமாம். ஆனால், மேற்படி 1–வது அயிட்ட சொத்தை ஒட்டி மேற்குபுறமாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

29) தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்குரை சொத்து விவரத்தில் அவ்வாறு 2–வது அயிட்ட சொத்தில் 0.52 செண்ட் ல் 1/4 பாகம் எனவோ, மேற்படி சொத்து 1–வது அயிட்ட சொத்தை ஒட்டி மேற்கில் உள்ளதாகவோ, குறிப்புகள் காணப்படவில்லை என்றால், சரிதான். அதேபோல் 1972 ல் என் பாட்டி கிரயம் பெற்றதாக சொத்து விவரத்தில் குறிப்புகள் இல்லை என்றால், சரிதான். ச.எண்.534/3 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 2.18 ஏக்கர் நிலம் ஆகும். ச.எண்.534/3A ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால், 0.79 செண்ட் ஆகும். எப்போது மேற்படி ச.எண்.534/3 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால், 1970 ம் வருடத்தில் உட்பிரிவு செய்யப்பட்டது.

30) ச.எண்.534/3B ன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 0.87 செண்ட் ஆகும். ச.எண்.534/3C ன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 0.52 செண்ட் ஆகும். மேற்படி சர்வே எண்கள். 534/3 ல் மாதம்மாள் எவ்வளவு நிலத்தை கிரயம் வாங்கியுள்ளார் என எனக்கு தெரியுமா என்றால், மேற்படி 2.18 ஏக்கர் நிலத்தில் சரிபாதி 1.09 ஏக்கர் நிலத்தில் 1/3 பாகம் 0.36–1/4 செண்ட் நிலத்தை கிரயம் வாங்கியுள்ளார். வா.சா.ஆ.1 ன் படி 17.02.1971 ம் தேதியில் யார், யாரிடமிருந்து சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால், சிவசாமியிடமிருந்து தங்கம்மாள் ச.எண்.534/3C ல் 0.09 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 ல் என்ன சக்குபந்தி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், புறம்போக்கு நிலத்திற்கு மேற்கு, செம்ப கவுண்டர் வகையறா நிலத்திற்கு வடக்கு, பொன்னம்மாள், மாதம்மாள் நிலத்திற்கும் தெற்கு, மாதம்மாள் நிலத்திற்கும் கிழக்கு ஆகும்.

31) மேற்படி வா.சா.ஆ.1 இவ்வழக்கு தாக்கல் செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது என்றால், சரிதான். மேற்படி பதிவு நகல் யார் பெயரில் பெறப்பட்டது என்றால், என் பெயரில்தான் பெறப்பட்டுள்ளது. 2014 ம் வருடத்தில் இவ்வழக்கை என் தந்தை தாக்கல் செய்துள்ள நிலையில், எதனால் என் பெயரில் வா.சா.ஆ.1 சான்றாவணம் பெறப்பட்டுள்ளது என்றால், அவருக்கு போதிய படிப்பறிவு இல்லாததால் மேற்படி நகலை நான் பெற்றேன்.

32) மேற்படி வா.சா.ஆ.1 சான்றாவணத்தில் 2 ம் பக்கத்தில் சக்குபந்தி விவரத்தில் ஒரு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி பத்திரம் எழுதப்பட்டுள்ள கையெழுத்திற்கும், திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால், சரிதான். சாட்சி அதில் வரி அடித்து சேர்க்கப்பட்டுள்ளது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என கூறுகிறார். அதில் "(கிழக்கு, பொன்னம்மாள் நிலத்திற்கு)" என இடைசெருகலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி இடைசெருகலின் அருகே அடித்தல், திருத்தல் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது.

33) மேற்படி வா.சா.ஆ.1ன் அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. என் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் அசல் ஆவணம் வா.சா.ஆ.1ல் 2-வது பக்கத்தில் சொத்து விவரத்தில் அடித்தல், திருத்தல் அதிக அளிவில் காணப்படுகிறது என்றால், சரிதான். ஆனால், அதற்கான விளக்கம் பத்திரத்திலேயே எழுதப்பட்டுள்ளது.

34) மேற்படி வா.சா.ஆ.1ல் ச.எண்.534/3C நஞ்சை ஏக்கர் 2.18க்கு தீ.ரூ.7.89 இதில் 0.09 சென்ட் என எழுதப்பட்டு, அடிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி அடிக்கப்பட்ட வரிக்கு பிறகு, நிலத்திற்கு சக்குபந்தி தாயம்மாள் நிலத்திற்கு கிழக்கு, பத்மாவதி, நிர்மலா, சிவயோகம் இவர்கள் நிலத்திற்கு தெற்கு, புறம்போக்கு நிலத்திற்கும் மேற்கு, செம்ப கவுண்டன், மாதம்மாள் இவர்கள் நிலத்திற்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், சரிதான். மேற்படி அடிக்கப்பட்ட வரிக்கும், செக்குபந்தி விவரத்திற்கும் இடையே "ச.எண்.534/3C நஞ்சை ஏக்கர் 0.52க்கு தீ.ரூ.1.88 இதில் 0.09 சென்ட்" என இடைசெருகலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் சக்குபந்தி விவரத்தில் முதலில் தாயம்மாள் நிலத்திற்கு கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளதில், தாயம்மாள் என்ற பெயர் அடிக்கப்பட்டு, அதற்கு கீழ் மாதம்மாள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் சக்குபந்தி விவரத்தில் பத்மாவதி, நிர்மலா, சிவயோகம் இவர்கள் என்ற வார்த்தைகளும் அடிக்கப்பட்டு, பொன்னம்மாள் என இரண்டு முறை வெவ்வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

35) அதே சக்குபந்தி விவரத்தில் செம்ப கவுண்டர், மாதம்மாள் இவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதில் "மாதம்மாள் இவர்கள்" என்ற வார்த்தை அடிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி சொத்து விவரத்திலேயே நான்காவது வரியில் இடைசெருகல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதிலுள்ள கையெழுத்து மற்ற வரிகளில் கண்டுள்ள கையெழுத்துகளில் வேறுபடுகிறது என்றாலும், அதேபோல்

சொத்து விவரத்தின் இறுதி வரியில் வரி பிளப்பு குறித்து எழுதப்பட்டுள்ள வரிகளில் கண்டுள்ள கையெழுத்தும், அதற்கு மேல் சக்கு பந்தி விவரத்தில் உள்ள கையெழுத்தும் வேறுபடுகிறது என்றால், சரியல்ல. ஆனால், அடித்தல், திருத்தல் குறித்து அடித்தவரால்தான் அதே மையில் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

36) மேற்படி வரி பிளப்பு செய்ததாக எழுதப்பட்டுள்ள வரிகளில் சுருக்கு கையெழுத்து எதுவும் செய்யப்படவில்லை என்றால், வரியை ஒட்டினார்போல் கையெழுத்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் அடித்தல், திருத்தல் செய்யப்பட்டதற்கு அருகில் ஆவண எழுத்தரால் சுருக்கெழுத்து எதுவும் செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மேற்படி வரியை ஒட்டினார் போல் கையெழுத்து செய்யப்பட்டுள்ளதாக நான் சொல்வது சொத்தை விற்றவரின் கையெழுத்து என்றால், சரிதான்.

37) மேற்படி வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் விற்பனையாளர் சிவசாமிக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டதா அல்லது பிதுராஜ்ஜியமாய் பாத்தியப்பட்டதா என்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.